Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 311 பிலவ வருடம், ஆவணி மாதம் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (24.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 14, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper


## நக்கல் நமசிவாயம்




## மலையகக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

### இராதா எம்.பி. அழைப்பு

● க. கிஷாந்தன்

வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்திருப்பதுபோல் மலையகக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் - என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 02»

# அரசுக்குள் குத்துவெட்டு!

### விமலுக்கு எதிராக மீண்டும் போர்க்கொடி; ஜனாதிபதியிடம் முறையிட்ட எம்.பிக்கள்

● நமது விசேட செய்தியாளர்

அமைச்சர் விமல் வீரவங்ச உட்பட்ட ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சித் தலைவர்களின் அரச விரோத செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு ஆளுங்கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா நிலைமை காரணமாக கடந்த வாரம் உடனடி பொதுமுடக்கமொன்றை அமுல்படுத்துமாறு கோரிய பங்காளிக் கட்சிகள், இதுதொடர்பில் கூட்டாக கடிதமொன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தன. 02»

## மருத்துவரை மிரட்டினாரா ரிஷாட்?

### விசேட விசாரணைகள் ஆரம்பம்



● நா. தினுஷா

சிறைச்சாலை வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை செய்வதற்கு இரு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. 02»

## கொழும்பில் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்தது



(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

● யோ.தர்மராஜ்

அத்தியாவசிய சேவைகளுக்காக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச பணியாட்களைக்கொண்டு பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் கொழும்பு மற்றும் அண்மித்த பகுதிகளில் நேற்று மக்கள் நடமாட்டத்தில் வீழ்ச்சி காணப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பு - நீர்கொழும்பு வீதி, அதிவேக வீதி, கொழும்பு காலிமுகத்திடல் வழியான பிரதான வீதிகளில் வழக்கத்தைப் போன்று போக்குவரத்து நெரிசல் இல்லை என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். 02»



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டெனிஸ் சாய்பிக்கும் இடையில் அமைச்சின் அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. சமகால அரசியல், பொருளாதாரத்துறையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பரந்த ஒத்துழைப்பு குறித்தும் கொவிட் -19 தொற்றின் சவால்களை எதிர்கொள்வதில் ஒன்றியத்தின் ஆதரவு குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர் கைதுக்கான காரணத்தை சமூகமயப்படுத்துக!

### ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு பொலிஸ் மா அதிபருக்கு அவசர கடிதம்

ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான சமீபத்திய சம்பவங்களின் பின்னணி தெளிவற்றவையாகவே இருக்கின்றன. அதனால், பரிந்துரைக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளுக்கமைய செயற்படுவதை உறுதிப்படுத்துமாறும், ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படும் தருணங்களில் கைதுசெய்யப்பட்டதற்கான காரணத்தை சமூகமயமாக்குமாறும் தெரிவித்து... 02»

## சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிஷங்கரி தவராசா உயிரிழப்பு



தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் மற்றும் முக்கியமான வழக்குகள் பலவற்றிற்கு ஆஜராகி வாதிட்டு நியாயத்தை பெற்றுக் கொடுத்து நீதித் துறையில் பிரபலயமாக திகழ்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிஷங்கரி தவராசா திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் நேற்று (23) உயிரிழந்தார்.

பிரபல சட்டத்தரணி கே.வி. தவராசாவின் துணைவியரான கௌரிஷங்கரி, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் சிலகாலம் செயற்பட்டதுடன் அக் கட்சியின் முக்கிய வழக்குகளில் ஆஜராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய உணவுகளை பெறுவதில் பெரும் சிரமம்

### நெருக்கடியான 5 நாடுகளுக்குள் இலங்கையும் அடங்குவதாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



● யோ.தர்மராஜ்

உலகில் அத்தியாவசிய உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை சந்திக்கும் 5 நாடுகளுக்குள் இலங்கையும் அடங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

தற்போதுவரை பொருளாதார ரீதியில் இலங்கை அதிக நெருக்கடியை சந்தித்துள்ளது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் அத்தியாவசிய... 02»

## வாழைப்பூ இல்லாமல் வாழைக்குலை! வாழைச்சேனையில் அபூர்வம்



●கல்குடா நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் வாழை மரமொன்றில் வாழைப்பூ இல்லாமல் காய் காய்த்த அபூர்வ சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை - கல்குடா வீதியில் வசிக்கும் தம்பிராசா திருஞானசெல்வம் என்பவரின் வீட்டுத்தோட்டத்திலுள்ள வாழைமரத்தில் பூ இல்லாமல் வாழைக்குலையிட்டுள்ளது.

இதனை பிரதேச மக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

## கொரோனா பாதிப்புக்குள்ளான 30 வீதமானோர் நிமோனியாவால் பலி!

### விசேட சட்ட வைத்திய அதிகாரி சன்ன பெரேரா தகவல்

● யோ.தர்மராஜ்

கொவிட் தொற்றினால் உயிரிழந்த 100 பேரிடம் பிரேத பரிசோதனை செய்துள்ளதாகவும் அவர்களில், சுமார் 30 வீதமானோர் கொவிட் நிமோனியாவினாலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் தேசிய தொற்று நோயியல் நிறுவகம் மற்றும் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரி சன்ன பெரேரா தெரிவித்தார்.

கொரோனா மரணங்கள் குறித்து முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனைகள் குறித்து நேற்று (23) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றினால் உயிரிழப்போர் குறித்து பிரேத பரிசோதனைகளை செய்து வருகிறோம். அதன்படி, 2020 மே 5ஆம் திகதியே முதல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இதுவரை நாங்கள் கொவிட் தொற்றினால் உயிரிழந்த 100 பேரிடம் பிரேத பரிசோதனை செய்துள்ளோம்.

கொரோனா தொற்று ஏற்பட்டு நுரையீரல் மற்றும் உள் உறுப்புகளில் ஏற்படும் மாற்றங்களை கண்டறிந்துள்ளோம். 02»

## துறைமுக அதிகாரசபையில் இடைத்தங்கல் சிகிச்சை நிலையம்

● நா. தினுஷா

கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்வரை தங்குவதற்கென இடைத்தங்கல் சிகிச்சை மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நோயாளர்களுக்கு அவசர சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளடங்கும் வகையில் இந்த மத்திய நிலையம் உருவாக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தில் சுகாதார அமைச்சின் கொவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் முழுமையாக கடைப்பிடிக்கப்படும் என்றும் அதிகாரசபையின் கொவிட்-19 தடுப்புக்கான செயலணியின் தலைவர், மனிதவளப் பிரிவின் பணிப்பாளர் நலின் அபோன்சோ இத்திட்டத்துக்கு தலைமை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானிலுள்ள இலங்கையரை பாதுகாக்குமாறு சஜித் கோரிக்கை

ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் இலங்கையர்களின் உயிர்களையும் உடைமை களையும் பாதுகாப்பது, எங்கள் தூதரகத்தின் மற்றும் அதன் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் பிரதான அரசியல் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி ஆப்கானிஸ்தானின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பில் உன்னிப்பான கவனத்தைச் செலுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இலங்கையின் தேசிய நலன்களைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது. ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் இலங்கையர்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாப்பது, எங்கள் தூதரகத்தின் மற்றும் அதன் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

ஆப்கானிஸ்தான் சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடாக இருப்பதால், இக்காலப் பகுதியில் சார்க் நாடுகளின் பாதுகாப்பு மற்றும் கட்டுக்கோப்பை உறுதிசெய்ய அவர்களது உத்தியோகபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி மேலும் சார்க் அமைப்பின் பொதுச் செயலாளரை கேட்டுக்கொள்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறான நெருக்கடியான நிலையில் இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச கடமைகள் பற்றியும் நினைவூட்ட விரும்புகிறது. புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகக் கூடிய நாட்டுக்கு மீளவும் அனுப்பி வைக்கக் கூடாது என்னும் பொறுப்புக்கு மதிப்பளிக்குமாறும் ஐக்கிய மக்கள் சக்தி விசேடமாக அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றது. இந்த சூழலில், தற்போது இலங்கையில் வசிக்கும் அல்லது எதிர்காலத்தில் இலங்கைக்குள் நுழையக்கூடிய ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மதிக்க அரசாங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட பொறுப்பு உள்ளது. இவ்வாறான அரசியல் நெருக்கடிகளின் போது குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்,

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தனது ஒத்துழைப்பை இதனூடாகத் தெரிவித்துக்கொள்வதுடன் மனித உரிமைகளை மதிக்குமாறும் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் ஜனநாயக ஆட்சியை உடனடியாக மீளமைக்குமாறும் தாலிபான் ஆட்சியாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



(படமும் தகவலும் - மணவை அசோகன்)

**சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் ரி.வெங்கடேஸ்வரன், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை சந்தித்து பேசினார். தமிழக ஆளுநரின் ராஜ்பவன் இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் ஆனந்தராவ் வி.பட்டேலும் கலந்துகொண்டார்.**

## காரைதீவு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு:

# உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் சபையிலிருந்து வெளியேறினார் தவிசாளர் ஜெயசிறில்

*(மாளிகைக்காடு நிருபர்)*

போதியளவு வருமானமில்லாமையினாலும், மக்களின் வரிப்பணம் வீணாக புகையாகிக் கொண்டிருப்பதனாலும், சிறிய பரப்பளவைக் கொண்ட காரைதீவு பிரதேச சபை எல்லையினுள் 500 லீட்டர் எரிபொருள் என்பது கூடுதலான தொகை என்பதனாலும் காரைதீவு தவிசாளரின் வாகனத்திற்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் எரிபொருள் கொள்ளளவில் மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர் கொண்டுவந்த பிரேரணை பல்வேறு கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் ஒரு மேலதிக வாக்கினால் வென்றது என பிரதேச சபை உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு சபை அமர்வு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தனர்.

காரைதீவு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபையின் தவிசாளர் கி.ஜெயசிறிலின் தலைமையில் நேற்று (23) காலை சபா மண்டபத்தில் இடம்பெற்றபோது குறித்த பிரேரணை அடங்களாக பல்வேறு பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இருந்தாலும் சபை அமர்வை 15 நிமிடங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் பணித்ததாக கூறி விரைவாக சபையமர்வை முடிக்க தவிசாளர் எத்தணித்தபோது பிரேரணைகளை ஒத்திவைக்க கோரிய உறுப்பினர் ஏ.ஆர்.எம்.பஸ்மீருக்கும் தவிசாளருக்குமிடையே வாய்த்தர்க்கம் உண்டானதாகவும் அதன்பிரகாரம் திண்மக்கழிவகற்றும் ஊழியரை கொண்டு பஸ்மீரை சபையை விட்டு வெளியேற்ற தவிசாளர் பணித்தபோது சபை அமர்வில் கூச்சல் குழப்பம் உண்டானதாகவும் நீண்ட குழப்பத்தின் பின்னர் சபை சுமூக நிலையை அடைந்தது. அதன்பின்னர் இடம்பெற்ற காரைதீவு தவிசாளரின் வாகனத்திற்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் எரிபொருள் கொள்ளளவில் மாற்றத்தை கொண்டுவர வேண்டும் எனும் பஸ்மீரின் பிரேரணை பிரதேச சபை உப தவிசாளர் ஜாஹீர் வழிமொழிய தவிசாளர் எதிர்ப்பை வெளியிட்டார்.

யாருக்கும் கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு வழங்கப்படாமல் நேரடியாக வாக்களிப்புக்கு சென்ற பிரேரணையை எதிர்த்து தவிசாளர் ஜெயசிறில் உட்பட ஐவர் வாக்களித்தனர். பிரேரணையை ஆதரித்து உப தவிசாளர் ஏ.எம்.ஜாஹீர், ம.கா உறுப்பினர் முஸ்தபா ஜலீல், சுயட்சை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர், மு.கா உறுப்பினர் எம்.எச்.எம். இஸ்மாயில், சுயேட்சை உறுப்பினர் க.குமாரஸ்ரீ, சுதந்திர கட்சி உறுப்பினர் ஜெகன் ஆகியோர் வாக்களித்தனர். மு.கா உறுப்பினர் எம்.என்.எம். றணீஸ் தனக்கு கருத்து கூற வாய்ப்பு தராத காரணத்தினால் நடுநிலை வகிப்பதாக அறிவித்தார். இதன்மூலம் ஒரு மேலதிக வாக்கினால் பிரேரணை வெற்றிபெற்று தவிசாளரின் வாகனத்திற்கு வழங்கப்படும் எரிபொருள் கொள்ளளவில் மாற்றத்தை கொண்டுவர தீர்மானம் எடுக்கப்பட்டது.

வாகன சாரதிக்கான மேலதிக நேர கொடுப்பனவு சம்பந்தமான பிரேரணை, கடந்த மாத கணக்கறிக்கை என்பனவற்றுக்கும் பதிலளிக்காமல் சபை அமர்வில் உறுப்பினர்களின் சரமாரியான கேள்விகளினால் இடம்பெற்ற அசாதாரண நிலையை கட்டுப்படுத்த முடியாமல் திணறிய தவிசாளர், இடைநடுவில் சபை அமர்வை கைவிட்டு தப்பியோடினார் என ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது உபதவிசாளர் ஏ.எம்.ஜாஹீர், பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.எம்.பஸ்மீர், முஸ்தபா ஜலீல் ஆகியோர் தெரிவித்தனர்.

## கொரோனா பாதிப்புக்குள்ளான...

மேலும், கொரோனா தொற்றினால் உயிரிழப்போரில்' சுமார் 30 வீதமானோர் கொவிட் நிமோனியாவினாலேயே உயிரிழக்கின்றனர். மேலும், ஒரு சிறிய சதவீதமானோரே நேரடி கொவிட் நோய்த்தொற்றினால் நுரையீரலில் இரத்தக் கட்டிகளை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்துகின்றது.

நியுமோனியா நோய் நிலைமைக்கு முன்னதாக ஏற்படும் நுரையீரல் சிக்கலானது எக்கியுட் லிம்போஸிட்டிக் இன்ரஸ்ட்ரீஸல் நிவ்மோநைன்டீஸ் என கண்டறியப்பட்டுள்ளது. நுரையீரலின் குழிகளின் சுவர்கள் பாதிக்கப்பட்டு நுரையீரலிலுள்ள சைலன் என்ற பகுதி நுரையீரலில் கழன்று விழும் ஆபத்து காணப்படுகின்றன. இதனாலேயே கொவிட் தொற்றினால் நுரையீரல் தொற்று போன்ற சிக்கல்கள் உள்ளவர்களுக்கு தொற்று ஆரம்ப கட்டங்களில் நுரையீரலில் சில மாற்றங்களை ஏற்படுத்தும். அதன்பின்னர் கொவிட் நியுமோனியா தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார்.

# அம்பியூலன்ஸ் சாரதி கொரோனாவுக்குப் பலி

## இரத்தினபுரி வைத்தியசாலையில் சம்பவம்

*(யோ.தர்மராஜ்)*

இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் சாரதியொருவர் கொரோனா தொற்றுக் குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் சேவையாற்றிய அம்பியூலன்ஸ் சாரதி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இருபது வருடங்களாக மக்களுக்காக சேவையாற்றிய 57 வயதுடைய பி.ஏ.அமரஜீவ என்ற சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்றினால் உயிரிழந்த முதல் அம்பியூலன்ஸ் சாரதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டயகம சிறுமியின் மரணம்:

## 05ஆவது சந்தேகநபராக ரிஷாட்டின் பெயர் இணைப்பு ஏனையோருக்கு செப். 06 வரை விளக்கமறியல்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் தீக்காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பிலான வழக்கின் ஐந்தாவது சந்தேகநபராக ரிஷாட் பதியுதீனின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - புதுக்கடை நீதிமன்றில் நேற்று (23) இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் போதே ரிஷாட் பதியுதீனின் பெயரும் சந்தேகநபர் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரிஷாட் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை மற்றும் தரகர் ஆகியோரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்படி, சந்தேகநபர்கள் எதிர்வரும் செப்டெம்பர் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மருத்துவரை...

கைதிகளின் சுகாதார நலன்களை தெரிந்துக்கொள்வதற்காக கொழும்பு, மெகசீன் சிறைச்சாலைக்கு சென்றிருந்தபோது, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தன்னை அவமதிக்கும் வகையில் செயற்பட்டதாகவும் வைத்தியர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகிவற்றால் தனித் தனியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படுமெனவும் சிறைச்சாலை திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்படுகையில்,

சிறைச்சாலை திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் வைத்தியர்கள் சிறைச்சாலையின் சுகாதார நிலைமைகளை மதிப்பிடுவதற்காக, நாளாந்தம் சம்பந்தப்பட்ட சிறைச்சாலைகளுக்கு செல்வார்கள். அதற்கமைய, கொழும்பு சிறைச்சாலையில் பணியாற்றும் வைத்தியர் ஒருவர் கைதிகளின் சுகாதார நடவடிக்கைள் தொடர்பில் அறிந்துக்கொள்வதற்காக மெகசீன் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் மருந்தகத்தில் கைதிகளுக்கு மருந்துகளை வழங்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் அவ்விடத்துக்கு வருகை தந்துள்ளதுடன், வைத்தியருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி அவமதிப்பு செய்யும் வகையில் செயற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கும் பொலிஸ் மா அதிபர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சகலருக்கும் சம்பந்தப்பட்ட வைத்தியர் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டுக்கமைய, சுகாதாரக் காரணங்களுக்காக ரிஷாட் எம்.பியை சற்று வெளியில் பொறுத்திருக்குமாறும், ஒருவரின் பின் இன்னொருவரை அனுமதிக்கும் முறையில் வரிசையில் நிற்குமாறும் வைத்தியர் அறிவித்துள்ளார். இதன்போது, கோபமுற்ற ரிஷாட் எம்.பி. வைத்தியருக்கு உயர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதுடன் அவமதிக்கும் வகையிலும் செயற்பட்டுள்ளார். இந்த விடயங்கள் தொடர்பில் குறித்த வைத்தியர் எழுத்து மூலமாக முறைப்பாடு செய்துள்ளார்.

இதுதொடர்பில் விசாரணை செய்வதற்காக சிறைச்சாலை திணைக்களத்தினால் உதவி சிறைச்சாலை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக பொலிஸ் திணைக்களத்தினாலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இருக் குழுக்களினதும் விசாரணைகளின் பின்னர், ரிஷாட் எம்.பியின் நடவடிக்கை குறித்து தெளிவினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். ரிஷாட் எம்.பியால் உயிர் அச்சுறுத்தல் அல்லது அவமதிப்பு இடம்பெற்றுள்ளதா என்பதை அறிந்துக்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டார்.

## அத்தியாவசிய...

உணவு பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படுகின்ற நிலையில், நாங்கள் வளர்ந்து நாட்டை வளர்ப்போம் என்ற வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் தற்போது மக்கள் பட்டினியால் வாடும் யுகம் உருவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பேரழிவு குறித்து கலந்துரையாடுவதற்கு கட்சித் தலைவர்களை அழைக்காது, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை மட்டும் அழைத்திருப்பதாகவும், அவருடைய ஆலோசனையை மட்டும் அரசு பெற்றிருக்குமாக இருந்தால் தற்போதைய அரசும் ஜனாதிபதியும் 'சம்மா சம்புது சரணை' என்று மட்டும் கூற வேண்டும் - என்றார்.

## அரசுக்குள்...

ஆனால் அமைச்சரவை கூட்டத்தில் எதனையும் பேசாத அமைச்சர்மார் வெளியில் சென்று மக்களிடம் தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்ள முயல்வதாகவும், அமைச்சர் விமல் வீரவங்சவே இந்த நடவடிக்கைகளுக்கு தலைமை தங்குவதாகவும் ஆளுங் கட்சி எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் முதற்தடவையாக இடம்பெறவில்லையென்று சுட்டிக்காட்டும் எம்பிக்கள் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் எதிர்காலத்தில் நிலைமை மோசமாகி அரசவிரோத செயற்பாடுகளுக்கு இவர்களே துணைபோவார்களெனவும் குறிப்பிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

அமைச்சர் விமல் வீரவங்சவுக்கு எதிராக பின்வரிசை எம்பிக்களால் செய்யப்பட்டுள்ள இந்த புகாரால் மீண்டும் அரசுக்குள் குத்துவெட்டு நிலைமை உருவாகியிருக்கிறது.

## கொழும்பில் மக்கள்...

வீதிகளில் பெரும்பாலான வாகனங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டுமே பயணிக்கின்றதாகவும் என்று அவர் கூறினார்.

முக்கிய நகரங்களில் கிட்டத்தட்ட அனைத்து கடைகளும் மூடப்பட்டன. அனுமதிக்கப்பட்ட மருந்தகங்களில் குறைந்த எண்ணிக்கையிலானோரே மருந்துகளைப் பெறுவதற்கு வருகைதந்திருந்தனர்.

அத்தியாவசிய சேவைகளுக்கான அனுமதியை மீறி நகரங்களுக்கு வர வேண்டாமென சுகாதார அதிகாரிகள் மக்களை வலியுறுத்தி வருகின்றனர், இந்த வலியுறுத்தலினால் நகரங்களுக்கு வருவோரின் எண்ணிக்கையை குறைத்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டுப்பாடுகளை வரும் நாட்களிலும் எதிர்பார்க்கப்படுகிறதாகவும் சுகாதார துறையினர் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர்...

ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகிய ஐந்து அமைப்புகளினால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

லங்கா ஈ நிவுஸ் செய்தி வலைத்தளத்தில் ஊடகவியலாளராக கடமை புரியும் கீர்த்தி ரத்நாயக என்பவர் இந்திய தூதுவராலயத்திற்கு சில தகவல்களை பெற்றுக்கொடுத்தா' என்ற குற்றச்சாட்டில் அவரை 90 நாள் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்தி இணையத்தளத்தின் ஆசிரியர் குழு எமக்கு அறியத்தந்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளரை பரிந்துரைக்கப்பட்ட சட்ட விதிகளுக்கமைய விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவரது உயிருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பாகிய நாம் முதலில் உங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

அவர் கைது செய்யப்பட்ட குற்றச்சாட்டு தவிர்ந்த அவர் கடமை புரியும் செய்தி இணையத்தளத்தின் தகவல்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பில் காவல்துறையினர் விசாரணை செய்து வருவதுடன், மேலும் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் ஈ நிவுஸ் ஆசிரியர் குழு குறிப்பிடுகின்றது.

நீதித்துறை செயல்பாட்டில் ஏதேனும் ஒரு சம்பவம் தொடர்பில் அந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்களைத் தவிர, அவரிடம் காணப்படும் ஏனைய மூலாதாரங்களை வெளிப்படுத்தாது அதன் ரகசியத்தன்மையைப் பேணுவதானது ஊடகவியலாளர்களின் பணிசார் பொறுப்பு மற்றும் ஊடகவியல் மரபு என்பதனை இத் தருணத்தில் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே, கீர்த்தி ரத்நாயக சம்பவம் தொடர்பான அனைத்து உண்மை தகவல்களையும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன், சட்ட ஏற்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதே போல கடந்த சில நாட்களுக்கு முன்னர் சமூக வலைத்தள ஆர்வலரான துஷாரா வன்னி ஆராச்சி என்பவரின் வீட்டை அதிகாலை வேளையில் பெருமளவான பொலிஸ் அதிகாரிகளைக்கொண்ட குழு சோதனை நடத்தியதாகக் கூறப்படுகின்றமை, தமிழன் பத்திரிகை பிரதம ஆசிரியர் தங்கியிருந்த வீட்டிற்குள் சி.ஐ.டி. என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் நுழைய முற்பட்ட சம்பவம். அதே போன்று மட்டக் களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் விசாரிக்கப்பட்ட சம்பவம்.

இந்த சமீபத்திய சம்பவங்களின் பின்னணி தெளிவாக இல்லை என்பதனால் இந்த சம்பவங்கள் தொடர்பான தெளிவான தகவல்களை சமூகத்திற்கு தெரியப்படுத்துவது இன்றியமையாததாக காணப்படுகின்றது.

ஊடகவியலாளர்களை பயமுறுத்தும் விதத்தில் செயல்படுவதானது அவர்களின் ஊடக சுதந்திரத்தைத் தடுப்பதுடன் மேலும் அவர்களின் ஊடக பணி நடவடிக்கைகளின் செயல்திறனை பாதிக்க வழிவகுக்கும் என்பதனால், பரிந்துரைக்கப்பட்ட சட்ட ஏற்பாட்டு விதிகளுக்குள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிப்படுத்துமாறும், ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படும் தருணங்களில் கைதுசெய்யப்பட்டதற்கான காரணத்தை சமூக மயமாக்குமாறும் ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு என்ற வகையில் உங்களை கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மலையகக் கட்சிகள்...

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இன்று வட, கிழக்கு மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு விடயங்களுக்கு எதிராக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் வட, கிழக்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து இருப்பது வரவேற்க கூடிய விடயமாகும்.

அதேபோல மலையகத்திலும் இன்று எங்களுடைய மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாக சம்பள உயர்வு பிரச்சினை, தடுப்புசிகள் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சனைகள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சலுகைகள் கிடைக்காத சூழ்நிலை தடுப்புசி தொடர்பாக சரியான விழிப்புணர்வு இல்லாத நிலைமை என பல்வேறு பிரச்சினைகளை எமது மக்கள் சந்தித்து வருகின்றார்கள்.

இந்த பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கத்தின் மூலம் பெற்றுக்கொடுக்க வேண்டுமாக இருந்தால் மலையகத்தில் இருக்கின்ற அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலம் மாத்திரமே அரசாங்கத்திற்கான ஒரு பாரிய அழுத்தத்தினை கொடுக்க முடியும். மலையக கட்சிகள் தனித்து நின்று செயல்படுவதால் எதனையும் சாதிக்க முடியாது.

அனைவருடனும் இணைந்து செயல்படுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதற்கான முன்னெடுப்புகளை உரியவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இன்று கொரோனா தொற்று மிக வேகமாக பரவி வருகின்ற இந்த சூழ்நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் பல மைல்களுக்கு அப்பால் அமைக்கப்பட்டு இருப்பதால் எங்களுடைய மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.எனவே ஏனைய மாவட்டங்களை போல மலையக பகுதிகளில் இருக்கின்ற பாடசாலைகள், ஆலய மண்டபங்கள், சனசமூக நிலையங்கள் இவற்றை தனிமைப்படுத்தல் நிலையங்களாக செயற்படுத்த முடியுமாக இருந்தால் சிரமங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

அரசாங்கம் 2 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற இந்த சூழ்நிலையில், அந்த தொகையானது மலையகத்திலே கடந்த காலங்களில் கட்சி ரீதியாக வழங்கப்பட்டதை போல் அல்லாமல் உரியவர்களுக்கு சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் சரியானவர்களை இணங்கண்டு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று அரசாங்கம் தன்னுடைய இயலாமையை மறைத்து கொள்வதற்காக அரசாங்கத்திற்குள் சிக்கல்கள் இருப்பது போல ஒரு நாடகத்தை அரங்கேற்றி மக்களின் உண்மையான பிரச்சினைகளை மழுங்கடிக்க செய்வதற்கு முயற்சி செய்கின்றது.

எனவே அந்த செயல்பாடை தவிர்த்து மக்களின் பிரச்சினைகளை இணங்கண்டு அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இலங்கை நாட்டிற்கு எப்போதெல்லாம் பிரச்சினைகள் ஏற்படுகின்றதோ, அனர்த்தங்கள் ஏற்படுகின்றதோ, அந்த ஒவ்வோரு சந்தர்ப்பத்திலும் இந்திய அரசாங்கம் தன்னுடைய உதவி கரத்தை நீட்டி இருக்கின்றது.

இந்த கொரோனா தொற்று ஆரம்பித்த காலத்தில் எங்களுக்கு தேவையான ஒரு தொகை தடுப்புசிகளை இலவசமாக வழங்கி வைத்ததோடு, இன்னும் பல்வேறு உதவிகளை செய்தது.

இன்று ஓட்சிஜன் தடுப்பாடு ஏற்பட்டுள்ள இந்த நிலையில் இந்திய அரசாங்கத்தின் கப்பல் மூலமாக 100 தொன் ஓட்சிசன் அனுப்பி வைத்துள்ளதோடு, எங்களுடைய கப்பல் மூலமாக கொண்டு வருவதற்கு 40 தொன் ஓட்சிஜனையும் வழங்கியுள்ளது.

காலத்தின் தேவையறிந்து இந்திய அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது. எனவே இன்னும் பல உதவிகளை இந்திய ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் எங்களுடைய வெளியுறவு கொள்கையில் பல மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

அதனை உணர்ந்து புதிய வெளியுறவு அமைச்சர் செயல்படுவார் என எதிர்ப்பார்க்கின்றோம் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 24.08.2021 செவ்வாய்க்கிழமை – ஆவணி 08

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| | ராகு காலம் | எமகண்ட காலம் |
| காலை 10.42 | மாலை 3.17 - 4.49 | காலை 9.08 - 10.41 |
| பிற்பகல் 12.12 | | துர் முகூர்த்தம் |
| | குளிகை காலம் | காலை 8.32 - 9.21 |
| | பி.பகல் 12.13 - 1.45 | இரவு 11.01 - 11.49 |

**நட்சத்திரம்: பூரட்டாதி**
இரவு 7.47 வரை

**யோகம்: சுகர்மம்**
காலை 6.59 வரை

**திருதி**
25.08.2021
காலை 5.56 வரை

**திதி: துவீதியை**
பிற்பகல் 4.05 வரை

**திரிதீயை**
25.08.2021
பிற்பகல் 4.18 வரை

**முற்கரணம்: கரஜம்**
அதிகாலை 4.13
மாலை 4.05

**பிற்கரணம்: வணிஜம்**
பி.ப. 4.05 - 25.08.2021
காலை 4.06 வரை

**மேடம்**
சுயமாக சிறு தொழில் செய்பவர்களுக்கு வேலை விரிவாக்க எண்ணங்கள் அதிகரிக்கும். பெண்களுக்கு சிறிய கவலைகள் ஏற்படலாம்

**ரிஷபம்**
பெற்றோரின் ஆலோசனைகள் நன்மை தரும். பதவியில் மேலாண்மை நிலையில் இருப்பவர்களுக்கு நன்மைகள் உண்டாகலாம்

**மிதுனம்**
நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். இல்ல சூழல் மகிழ்ச்சி தரும். வருவாய்க்கான புதிய நிலைகள் ஏற்படலாம்.

**கடகம்**
வீடு/காணி வாங்கும் அல்லது விற்கும் செயல்கள் உண்டாகலாம். அயலில் அல்லது தேவையற்றவர்களிடம் பிரச்சினைகளை உருவாக்காமல் அவதானமாக இருப்பது நன்மை. சந்திராஷ்டமம்: ஆயில்யம் நட்சத்திரத்திற்கு பிற்பகல் 1.39 வரை.

**சிம்மம்**
வணிகத்தில் சில வாய்ப்புகளை இழக்க நேரிடலாம். கடன்கள் கொடுப்பதிலும் சிறிய கவனம் தேவை. இறை வணக்கம் பிரச்சினைகளை குறைக்கும்.
சந்திராஷ்டமம்: மகம் நட்சத்திரத்திற்கு பிற்பகல் 1.39 லிருந்து 25.08.2021 பி.ப. 2.29 வரை

**கன்னி**
இல்லத்தில் வயதில் மூத்த உறவுகளிடம் கண்ணியமாக இருப்பது நன்மை. தம்பதியரிடையே அனைத்து விடயங்களையும் பகிர்தல் ஏற்படலாம். சில அனுகூலமான நிலைமை ஆறுதலை தரும்.

**துலாம்**
இல்லறம் இனிமை பெறும். வணிகர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம்.

**விருச்சிகம்**
அதிக மக்கள் கூடும் இடங்களை தவிர்ப்பது நன்மை. உடல் நலத்திலும் கவனம் தேவைப்படலாம். வருங்கால கவலைகளை இறை தியானத்தில் செலுத்தி நன்மை பெறலாம்.

**தனுசு**
பிற நபர்களின் மீதான நம்பிக்கையில் கவனம் தேவைப்படலாம். வர்த்தகத்தில் நற்பெயருக்கு களங்கம் ஏற்படலாம் என்ற கவலை தோன்றலாம். இறையருள் நன்மை தரும்.

**மகரம்**
உயர்கல்வி பெறும் முயற்சிகள் பயனளிக்கும். சந்தைப்படுத்தும் தொழிலில் சாதகமான அறிகுறி தோன்றலாம்.

**கும்பம்**
நம்பிக்கை அதிகரிப்பால் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கலாம். அரசாங்க பணிகளில் இருப்பவர்களுக்கு வேலைகள் அதிகரிக்கும்.

**மீனம்**
தம்பதியரிடையே அன்பு அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சிகளுக்கு தடைகள் நீங்கலாம்.

# இலங்கை - இந்தியா மீனவர் பிரச்சினைகளுக்கு அர்த்தமுள்ள, நடைமுறைத் தீர்வு காணப்படும்

## கோபால் பாக்லே - ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலில் பொது இணக்கம்

## இரு நாட்டு கூட்டு ஆணைக்குழுவை முன்னதாகவே கூட்டுவதற்கும் தீர்மானம்

இலங்கை - இந்தியாவுக்கு இடையில் நிலவும் மீனவப் பிரச்சினைகளுக்கு அர்த்தமுள்ள, நடைமுறைத் தீர்வை காண்பதற்கும் கூட்டு ஆணைக்குழுவை முன்னதாகவே கூட்டுவதற்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலின்போது இரு தரப்பினருக்கிடையே உடன்பாடு காணப்பட்டுள்ளது.



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, புதிய வெளிநாட்டு அமைச்சராக கடமைப் பொறுப்பேற்றுள்ள பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக வெளிநாட்டு அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது கருத்து தெரிவித்த வெளிநாட்டு அமைச்சர், கொவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக இந்தியா நல்கிய தொடர்ச்சியான ஆதரவுகளுக்காக பாராட்டுகளைத் தெரிவிப்பதாகவும், இந்தியக் கடற்படைக் கப்பல்களைப் பயன்படுத்தியும் கூட, கிழக்கிந்தியத் துறைமுகங்களிலிருந்து திரவ ஒட்சிசன் கொண்ட அவசர சரக்குகளை வழங்கிய இந்திய அரசாங்கத்துக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மத சுற்றுலாவை மேம்படுத்துவதையும் இந்தக் கலந்துரையாடல் மையமாகக் கொண்டிருந்தது. இலங்கையில் பௌத்த கலாசாரத் தலங்களைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசாங்கத்தால் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கப்பட்டமைக்காக வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் பாராட்டினார்.

கடைசியாக 2016இல் கூட்டப்பட்ட இந்திய - இலங்கை கூட்டு ஆணைக் குழுவை முன்கூட்டியே கூட்டும் சாத்தியக்கூறுகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர். கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், சுற்றுலா, வர்த்தகம், முதலீடு, மீன்வளம் மற்றும் மின் துறை ஆகியவற்றின் கீழ் குறிப்பிட்ட பாடப் பகுதிகளை உள்ளடக்கிய கூட்டு ஆணைக்குழுவின் கீழ் உள்ள ஆறு பணிக்குழுக்கள் கூடி விரைவில் சாத்தியமான வாய்ப்பை சந்திக்க வேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

மீன்வளம் தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், இரு தரப்பினரும் பிரச்சினைகளுக்கு அர்த்தமுள்ள, நடைமுறைத் தீர்வைத் தேடுவதற்கும் ஒப்புக்கொண்டனர். இலங்கையில் மீன்வளத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான இந்தியாவின் உதவி பெரிதும் பாராட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியா தனது மருந்து உற்பத்தி ஆலைகளை இலங்கையில் அமைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. நெருங்கிய அண்டைநாடுகளாக காலத்தின் சோதனைகளைத் தாண்டி தற்போதைய ஒத்துழைப்பு மட்டத்தில் திருப்தியை வெளிப்படுத்தியதுடன், பல துறைகளில் இருதரப்பு உறவுகளை இன்னும் உயர்மட்டத்திற்கு உயர்த்துவதற்குத் தீர்மானித்துள்ள இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளின் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் எடுத்துரைத்தனர்.

# வரணியில் 26 பேருக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், வரணி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு வரணியிலுள்ள மதுபான உற்பத்திச்சாலையில் பணியாற்றும் சிலருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. அதனையடுத்து அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வரணி மத்தி, வரணி, மாசேரி, கறுக்காய் உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 79 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருந்தது. அவர்களில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.



கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் நேற்று கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.
(படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன)

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 3,90,000 | 40,475 | 3,44,381 | 4,304 | 7,366 |

# நுவரெலியா பொது வைத்தியசாலையில் மருத்துவர்கள் உட்பட 23 பேருக்கு கொவிட்

நுவரெலியா பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் உள்ளிட்ட 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

மருத்துவர்கள் 3 பேர், தாதியர்கள் 13, கனிஷ்ட பிரிவு ஊழியர்கள் 7 பேர் என மொத்தமாக 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான மருத்துவர்கள், தாதியர் உள்ளிட்ட கனிஷ்ட ஊழியர்கள் சிலர் மருத்துவமனையின் கொரோனா வார்ட்களில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறைந்த அறிகுறிகள் உள்ள சிலர் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை பணிப்பாளர் குறிப்பிட்டார். இதன் காரணமாக மருத்துவ மனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும், எவ்வாறாயினும் தற்போதுள்ள மருத்துவர்கள், தாதியர்களைக் கொண்டு பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிக்கு ஒருவரின் வாகனத்திலிருந்து 25 மதுபான போத்தல்கள் மீட்பு

கண்டியிலுள்ள பிரபல விகாரையின் பிக்கு ஒருவருக்குச் சொந்தமான அதிசொகுசு வாகனத்திலிருந்தும், வர்த்தகர் ஒருவரின் வாகனமொன்றிலிருந்தும் 145 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மெனிக்ஹின்ன பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பிக்குவின் வாகனத்திலிருந்து 25 மதுபான போத்தல்களும் வர்த்தகரின் வாகனத்திலிருந்து 120 மதுபான போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பத்து நாட்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், ஊரடங்கு காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக இவ்வாறு மதுபானங்கள் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, கைதுசெய்யப்பட்ட வர்த்தகருக்கு சொந்தமாக மதுபானசாலையொன்று இருக்கின்றமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் மறைந்த லாபிர் கரிசனை காட்டினார்

## முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அனுதாபச் செய்தி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், யாழ்ப்பாண மாவட்ட மத்திய குழு உறுப்பினர் சகோதரர் கலாபூஷணம் மீரா லெப்பை லாபிரின் மறைவுச் செய்தி அறிந்து தாம் ஆழ்ந்த கவலையடைவதாகவும், அன்னார் வடபுலத்தில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அதிக கரிசனை காட்டி வந்தார் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சகோதரர் மர்ஹூம் எம்.எல்.லாபிர் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து, கேகாலை மாவட்டம், மாவனெல்லை பிரதேசத்தில் வசித்துவந்த நிலையில, பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்ததோடு, ஊடகத் துறையிலும் உயரிய பங்களிப்புகளைச் செய்து வந்திருக்கின்றார்.

நிலைமை ஓரளவு சீரான பின்னர், மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியேறி தனது பணியைத் தொடர்ந்தார். இனங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணுவதில் அவர் நெடுகிலும் அக்கறை கொண்டிருந்தார். சகோதரர் லாபிர் எப்பொழுதுமே ஆழ்ந்த சன்மார்க்கப் பற்றுடையவராகவும், அமைதியான சுபாவமுடையவராகவும் விளங்கினார்.


எமது கட்சியைப் பொறுத்தவரையில், 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் நடைபெற்ற முக்கியமான பல கூட்டங்களில் இயன்றவரை கலந்துகொண்டிருக்கின்றார்.

கண்டி, பொல்கொல்லையில் இறுதியாக நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கு அவர் வருகை தந்து முழு நாள் நிகழ்வுகளிலும் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸுல் அஃலா என்ற சுவன வாழ்வை வழங்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் கட்சியின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளுக்கு சென்று தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.





அனைவருக்கும் தடுப்பூசி எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின்கீழ் குறித்த நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது.

இராணுவத்தினரும், சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து மேற்கொள்ளும் குறித்த வேலைத்திட்டம் ஒரு வாரத்திற்கு இடம்பெறவுள்ளதாகவும், அதற்கமைவாக கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் 57ஆவது படைப்பிரிவு தலைமையகம் முன்பாக ஆரம்பமானது. முல்லைத்தீவு இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ்.பி.ஏ.கே.பிலபிரிலய, 57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.எம்.எச்.என்.ஹேரத், 571ஆவது படைப்பிரிவின் அதிகாரி மற்றும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன், இராணுவ அதிகாரிகள், வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலர் குறித்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ்.பி.ஏ.கே.பிலபிரிலய குறிப்பிடுகையில்,

விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். விசேடமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தவுள்ளோம். இந்தப் பிரதேசங்களிலுள்ள எமது தாய் தந்தையர்களுக்கு அவர்களின் வீடுகளுக்குச் சென்று குறித்த தடுப்பூசியை வழங்கவுள்ளோம்.

ஜனாதிபதியின் பணிப்பிற்கமைவாக கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை நிறைவுசெய்யுமாறு இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் ஆலோசனைக்கமைவாக இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மாவட்ட அரசாங்க அதிபர், சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அந்தவகையில் கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட தாய் தந்தையர்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தை நிறைவுசெய்வோமென நம்புகின்றோம் – என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 24 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஏன் இந்த வெறுப்பு?

ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்தியரை திட்டியதாகவும், மரண அச்சுறுத்தல் விடுத்ததாகவும் கொழும்பு குற்றப் பிரிவு விசாரணையை தொடங்கியுள்ளது.

புதிய மெகசீன் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சந்தேகநபரான ரிஷாட் பதியுதீன், கடந்த 15ஆம் திகதி தன்னைத் திட்டியதாகவும் மரண அச்சுறுத்தல் விடுத்ததாகவும் வைத்தியரான பிரியங்க இந்துனில் புபுலேவெல வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு அளித்த வைத்தியர், பின்னர் பொரளை பொலிஸில் கடந்த 21ஆம் திகதி முறைப்பாடு அளித்துள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்தது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய இந்த வழக்கை பொரளை பொலிஸார் தம்மிடம் ஒப்படைத்ததாகவும், சம்பவம் தொடர்பில் முறைப்பாடு வழங்கிய வைத்தியரிடமிருந்து வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

அதேசமயம், இது தொடர்பில் சிறைச்சாலைகள் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடமும் பொரளை பொலிஸ் நிலையத்திலும் குறித்த வைத்தியர் முறைப்பாடு செய்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கிடைத்த முறைப்பாட்டிற்கமைய, சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து நீதியான விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தி தெரிவிக்க விரும்பும் அதேசமயம், ரிசாட் பதியுதீன் எம்.பி. மீது தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதை நோக்குகையில், இது உண்மையான குற்றச்சாட்டுகளா இல்லை இதன் பின்னால் வேறு நோக்கங்கள் இருக்கின்றனவா என்பதுபற்றி யோசிக்கவேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக டாக்டர் ஷாபி உட்பட்ட பலர் மீது வசைமாரி பொழியப்பட்டது. இறுதியில் அந்த குற்றச்சாட்டுகளுக்கு என்ன ஆனது? குழந்தை பாக்கியத்தை இல்லாமல் செய்தாரென்ற குற்றச்சாட்டுகளால் குருநாகல் டாக்டர் ஷாபியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதுதான் மிச்சம். அவரை தேசத்துரோகியாக சித்திரித்து செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் கூட அவர்பக்க நியாயத்தை வெளியிடவில்லை. அதேபோலவே இப்போது ரிஷாட்டுக்கு எதிராக வரும் குரல்களின் பின்னாலும் ஏதோ ஓர் அரசியல் இருப்பது புலனாகிறது.

சிறைவாசம் அனுபவிக்கும் காலப்பகுதியில் வைத்தியசாலையிலிருந்து சில வாரங்களுக்கு முன்னர் ரிஷாட் வெளியேறியபோது, அவர் மலசலகூட யன்னலில் மருந்துகளை வீசினார் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. ரிஷாட் மலசலகூடம் செல்வதுமுதல் அவர் மருந்துகளை வீசுவதை பார்க்குமளவுக்கு அவர் மீதான கண்காணிப்பு இருக்கிறது. சாதாரண ஒருவர் கசப்பு மருந்தை குடிக்காமல் வெளியே வீசும் நிலைமை உலகில் இல்லையா? அல்லது அப்படி ஒருவர் மருந்தை வீசினால் அதற்கு காரணம் என்ன? என்பதை ஆராயாமல் அதையும் ஒரு செய்தியாக்கியவர்களை எந்த வகையறாக்களில் சேர்ப்பது?

ரிஷாட் பதியுதீன் நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்லாமல், அரசியல் கட்சியொன்றின் தலைவர். ஜனநாயக தேர்தலொன்றில் வாக்களித்த மக்களின் பிரதிநிதி. சிறைக்குள் அவருக்கு வழங்கப்பட்ட கண்ணியம் அல்லது அவமரியாதை காரணமாக அவர் அப்படி பேசியிருக்க வாய்ப்பில்லையா? மருத்துவர் ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் காரணங்களே இல்லாமல் சாதாரணமாகவே திட்டித் தீர்த்துவிட முடியுமா? போன்ற கேள்விகளுக்கு விசாரணையாளர்கள் பதில் தேட வேண்டும்.

இனங்களுக்கிடையில் குரோதம் ஏற்படும் வகையிலும் முஸ்லிம்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற ரீதியிலும் நாட்டில் அரங்கேறிவரும் காட்சிகள் சுபீட்சமான இலங்கையின் எதிர்காலத்திற்கு நல்ல சகுனங்கள் அல்ல. ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கும் கைங்கரியங்கள் நாடு மேலும் நாசமாய்ப்போகிடவே உதவிடும். அதுதான் உண்மை.







# அதிகாரப் போட்டியில் கலவர பூமியாகும் ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் இப்போது தலிபான்களின் கையில் சென்றுள்ளது. ஆட்சி அமைப்பது பற்றிய ஆலோசனையில் தலிபான்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், தலிபான்களை எதிர்த்து ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெறுகின்றன. அவற்றை தமது பாணியில் தலிபான்கள் அடக்கி வருகின்றனர். தலிபான்களின் ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து வாழ விரும்பாத ஆப்கான் மக்கள் நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கின்றனர். தலிபான்கள் அவர்களையும் அடக்கி மிரட்டுகிறார்கள்.

ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் ஆப்கானைக் கைப்பற்றி தலிபான்களை விரட்டியபோதும் அங்குள்ள பஞ்ச்ஷீர் மாகாணம் யாருக்கும் அடிபணியாமல் தலைநிமிர்ந்து நின்றது. கடந்த முப்பது வருடங்களில் தலிபான்கள், ரஷ்யா, அமெரிக்கா ஆப்கானை ஆட்சி செய்தபோதும் பஞ்ச்ஷீர் அடிபணியாமல் இருந்தது. பஞ்ச்ஷீரைக் கைப்பற்ற தலிபான் படை புறப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆப்கானில் ஆட்சி அமைக்காமல் போராட்டம் ஆரம்பமானால் நிலைமை மிக மோசமாகும்.

பஞ்ச்ஷீர் மலைப்பகுதியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் பூர்வகுடி இஸ்லாமிய மக்களின் கூட்டமைப்புதான் நோர்தன் அலியன்ஸ் (northern alliance). முதலில் முஜாகிதீன் அமைப்பில் இருந்த இந்தக் குழு தலிபான்களின் ஆட்சிக்குப் பின் 1995இல் பிரிந்து தனி குழுவாக உருவெடுத்தது. தலிபான்களின் ஆட்சியை கடுமையாக எதிர்த்து, அவர்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டங்களை 1995இலிருந்தே இந்த அமைப்பு முன்னெடுத்து வந்தது. தலிபான்களுக்கு எதிரான அமெரிக்கப் போராட்டத்தில் அமெரிக்கப் படைகளுக்கு ஆதரவாக நின்ற அமைப்புதான் நோர்தன் அலியன்ஸ் (northern alliance). சன்னி பிரிவு இஸ்லாமை பின்பற்றும் தஜிக் பிரிவு மக்கள்தான் இந்த மலைப்பகுதியில் வசித்து வருகிறார்கள்.

இவர்களின் குழுவைச் சேர்ந்தவர்தான் ஆப்கானின் துணை ஜனாதிபதி அம்ருல்லா சாலே. இவரைத்தான் சிஐஏ அமைப்பு உளவாளியாக வளர்த்துவிட்டது. அத்தோடு இவரை நாட்டின் ஆட்சி அதிகாரத்திலும் வளர்த்துவிட்டதும் அமெரிக்காதான். ஜனாதிபதி கானி நாட்டைவிட்டு வெளியேறியபோதும் கூட சாலே நாட்டைவிட்டு ஓடவில்லை. தற்போது இவர் பஞ்ச்ஷீர் மலைப்பகுதியில்தான் வசித்து வருகிறார். தலிபான் ஆட்சியை அகற்றுவேன் என்று அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிலுள்ள 34 மாகாணங்களில் பஞ்ச்ஷீர் மட்டுமே தலிபான்கள் இல்லாத பகுதியாக உள்ளது. இந்நிலையில், பக்லான் மாகாணத்தின் பானு, பொல்-இ-ஹெசார், தேஹ் சலா ஆகிய மாவட்டங்கள் தலிபான்கள் வசமிருந்து மீண்டும் பொதுமக்களின் கைக்கு சென்றுள்ளன. பொதுமக்கள் எழுச்சியாக தலிபான்களை எதிர்த்துப் போராடத் தொடங்கியுள்ளனர். எதிர்ப்புப் படைகளென அழைக்கப்படும் இவர்கள், தலிபான்களுடன் போராடி அவற்றை மீட்டுள்ளனர். இன்னொரு உள்நாட்டுப் போருக்கு ஆப்கான் தயாராகிறது.

காபூல் விமான நிலையத்தில் அமெரிக்க மீட்பு விமானங்கள் வந்திறங்கும் பகுதி மட்டுமே அமெரிக்க இராணுவ வீரர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. பிரதான நுழைவு வாயில் உள்ளிட்ட பகுதிகளில் தலிபான்கள் துப்பாக்கியோடு நிற்கிறார்கள். குடிமக்கள் வெளிநாட்டுக்கு செல்ல வேண்டாம் என அவர்கள் அறிவித்தபோதும் ஆயிரக்கணக்கில் மக்கள் குவிவதால் ரப்பர் பைப்புகளைக்கொண்டு அவர்களை அடித்து விரட்டுகிறார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகள் தற்போது அவர்களது நாட்டினரையும், அவர்களுக்கு உதவியாக இருந்த ஆப்கானிஸ்தானியர்களையும் மட்டுமே மீட்டு அழைத்துச் செல்கின்றன. பாஸ்போர்ட் உள்ளிட்ட எந்த ஆவணங்களும் இல்லாத சாமானிய மக்களும் உயிர் பயத்தில் தங்களையும் அழைத்துச் சென்றுவிடுமாறு குடும்பத்தோடு கெஞ்சுகின்றனர். கடந்த இரு நாட்களில் இரண்டாயிரம் பேரை அமெரிக்கா மீட்டுள்ளது. மீட்புப் பணிக்கான கால எல்லை எதிர்வரும் 31ஆம் திகதியாகும். அதற்குள் மேலும் ஆறாயிரம் பேரை மீட்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதற்குள் தப்பிச்சென்று விடுவதற்காக தலிபான்கள் விரட்டியடித்தாலும் விமான நிலையத்தின் முன்பாக மக்கள் குழுமியுள்ளனர்.

காபூலிலுள்ள ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையம் தலிபான்களிலிருந்து தப்பிக்க முயற்சிக்கும் ஆயிரக்கணக்கானோரின் மையப் புள்ளியாக உள்ளது. காபூல் விமான நிலையம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஏழு நாட்களில் குறைந்தது 20 ஆப்கானிஸ்தான் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மக்களைக் கட்டுப்படுத்துவதற்காக தலிபான்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலும், நெரிசலிலும் இந்த மரணங்கள் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

ஏற்றுமதி, இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளதால் ஆப்கானில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வங்கிகள் இயங்காமையால் பணப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. போதியளவு உணவுப் பொருட்கள் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை.

பாகிஸ்தான், துருக்கி போன்ற நாடுகளில் ஆப்கானிஸ்தான் மக்கள் தங்குவதற்கான மையங்கள் ஏறப்படுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆப்கானைச் சுற்றியுள்ள நாடுகள் எல்லையைத் திறந்து அங்கிருந்து வெளியேறும் மக்களை தம் நாட்டுக்கு அனுமதிக்க வேண்டும் என ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈரான், பாகிஸ்தான், இந்தியா, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட ஒருசில நாடுகள் நாட்டைவிட்டு வெளியேறும் ஆப்கான் மக்களுக்கு அடைக்கலம் வழங்கி வருகின்றன. ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுபவர்களை மத்திய ஆசிய நாடுகளில் குடியமர்த்த வேண்டும் என மேற்கத்திய நாடுகள் யோசனை தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானிலிருந்து அகதிகள் என்ற போர்வையில் வரும் பயங்கரவாதிகள் ரஷ்யாவுக்கு தேவையில்லை என்று அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார். தலிபான்களை ஆப்கானிஸ்தானின் அரசாக ஏற்கப்போவதில்லை என கனடா போன்ற நாடுகள் கூறியுள்ள நிலையில், காபூல் நகரை கைப்பற்றிய பின்னர் தலிபான்களுக்கு ஆதரவாக ரஷ்யா முந்திக்கொண்டு கருத்து தெரிவித்திருந்தது.

**ரமணி**







# கிண்ணியா அரச வங்கிகளில் தன்னியக்க இயந்திரமின்றி வாடிக்கையாளர்கள் சிரமம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேசத்தில் நான்கு இடங்களில் அரச வங்கிகள் இயங்கி வருகின்றது. எந்தவொரு வங்கியிலும் பணம் வைப்புச் செய்வதற்கான தன்னியக்க இயந்திரம் ஸ்மார்ட் வங்கி (SMART BANK) பொருத்தப்படவில்லையென வாடிக்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடவேண்டுமானால் வேலை நாட்களில் வேலை நேரத்தில் மாத்திரமே வைப்பிலிட வேண்டியுள்ளதாகவும் அவ்வாறு வேறு தினங்களில் ஏனைய நேரங்களில் பணத்தை வைப்பிலிடுவதற்கு பல கிலோமீற்றர் தூரத்திலுள்ள திருகோணமலை நகரத்துக்கு அல்லது கந்தளாய் பிரதேசத்துக்கு செல்லவேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் வேலைநேரம் தவிர்ந்த நேரங்களில் பணத்தை கணக்கில் வைப்பிலிடுவதற்கு ஏனையவர்களுக்கு பணத்தை அனுப்புவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று சூழ்நிலையால் வங்கியில் பணம் வைப்பிலிடுவதற்கு நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் வீணான காலதாமதம் மற்றும் மன அழுத்தத்திற்கு உள்ளாவதாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிண்ணியா பிரதேசத்தில் அரச வங்கிகள் அதிகமான வாடிக்கையாளர்களைக்கொண்டு காணப்படுகின்றன. அரசாங்க ஊழியர்களில் அதிகமானவர்கள் தங்களது சம்பளத்தை இவ்வங்கிகளிலேயே பெற்று வருகின்றனர்.

அதிக மக்கள் தொகை கொண்ட இப்பிரதேசத்தில் இதுவரைகாலமும் தன்னியக்க பணம் வைப்பிலிடும் இயந்திரம் பொருத்தப்படாமலிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே, உரிய அதிகாரிகள் கவனஞ்செலுத்தி பணம் வைப்பிலிடும் தன்னியக்க இயந்திரத்தைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணிநேரத்தில்

# 250 பேர் கொவிட் தொற்றுடன் அடையாளம்; கொரோனா தொற்றினால் 10 பேர் உயிரிழப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மயூரன்

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் உட்பட 10 பேர் கொரோனாவில் உயிரிழந்துள்ளதுடன், 250 பேருக்கு கொரோனா தொற்று உறுதி கண்டறியப்பட்டதையடுத்து மாவட்டத்தில் இதுவரை உயிரிழந்தோர் 182 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன். நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், ஓட்டுமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், செங்கலடி, ஏறாவூர், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் உட்பட 3 பேரும், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர் உட்பட 10 பேர் நேற்றுக் காலையுடன் முடிந்த 24 மணிநேரத்தில் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 53 பேருக்கும், மட்டக்களப்பில் 52, வாழைச்சேனையில் 3, காத்தான்குடி 11, ஓட்டமாவடி 2, செங்கலடி 27, ஏறாவூர் 7, பட்டிப்பளை 25, வவுணதீவு 6, வெல்லாவெளி 20, ஆரையம்பதி 14 பேர் உட்பட 250 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, நாளாந்தம் கொரோனா நோயாளர் வீதம் அதிகரித்துச் செல்வதுடன், ஒரேநாளில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். ஆகவே, மக்களை வீட்டைவிட்டு வெளியே வரவேண்டாம் என்றும் தொடர்ந்து சுகாதார வழிமுறைகளைப் பேணி நடப்பதன் மூலம் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூவருக்கு கொரோனா



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் உட்பட அங்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் வருகை தந்திருந்த பொது மக்கள் உட்பட 100 பேருக்கு நேற்று அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பொதுமக்கள் மூவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில் கல்முனை, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பிரதேசங்களில் தேவையின்றி வீதிகளில் நடமாடுவோர் சுற்றிவளைக்கப்பட்டு, அன்ரிஜன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் சிலர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 03 நாட்களாக இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி, அத்தியாவசிய தேவை எதுவுமின்றி எவரும் தமது வீடுகளிலிருந்து வெளியேற வேண்டாம் என கண்டிப்பாகக் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

சுகாதாரத்துறையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்கு பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் 2018 உடல்கள் நல்லடக்கம்



(மீராவோடை நிருபர்)

கொரோனா தொற்றினால் மரணமடைந்த நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி – மஜ்மா நகர் மையவாடியில் உடல்கள் நல்லடக்கம் இரண்டாயிரத்தை தாண்டியுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்ட 48 உடல்களுடன் இதுவரை மொத்தமாக 2018 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடிக்கு தற்போது நாளொன்றுக்கு 30 தொடக்கம் 50 வரையான சடலங்கள் நல்லடக்கத்துக்கு வருவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி மாத்திரம் 53 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதுவே ஒரேநாளில் அதிகூடிய உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட நாளாக பதிவாகியுள்ளது.

# மட்டக்களப்பு திமிலைதீவில் சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டவர் கைது

## 275 போத்தல்கள் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு திமிலைதீவில் ஊரடங்கு வேளையில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை 275 கால் போத்தல் கொண்ட மதுபான போத்தல்களுடன் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கமைய மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸ் சார்ஜன் ரி.கிருபாகரன் தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் மாலை குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது வீட்டின் வெளியே உள்ள மலசல கூடத்தில் காட்போட் பெட்டிகளில் மதுபான போத்தல்களை மறைத்துவைத்து வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை கைதுசெய்ததுடன், 275 கால் போத்தல் கொண்ட மதுபான போத்தல்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மதுபானங்களை அரச மதுவரித் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கைதுசெய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோத மதுபான விற்பனை - கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதூர் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்திசெய்த ஒருவருமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்று அதிகாலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் பேரில் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் புதூர் பகுதியில் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின்போதே இரு இடங்களில் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைத்து விற்பனைசெய்யப்பட்டுவந்த மதுபானம் மற்றும் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டன.

இதன்போது 5000 மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் பெருமளவு போத்தலில் அடைக்கப்பட்ட மதுபானம் ரின்களில் அடைக்கப்பட்ட சாராயம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மட்டக்களப்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலை மாவட்டத்தில் திருத்தவேலை காரணமாக எதிர்வரும் 31ஆம் திகதிவரை பகுதிநேர மின்வெட்டு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் பகுதிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலை நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படிநேற்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை திருத்த வேலை காரணமாக மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் 23ஆம் திகதி காலை 08 மணிமுதல் மாலை 05 மணிவரை திருகோணமலை மஹமாய மாவத்தை, 4ஆம் கட்டை, ஹொட்பே, தீவரகம்மான, சங்கம, தானியகம, சீனக்குடா ஆகிய பிரதேசங்களிலும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டதுடன், 28ஆம் திகதி காலை 08 மணிமுதல் மாலை 05 மணிவரை திருகோணமலை அபயபுரம், அநுராதபுர சந்தி பகுதி, அம்பாள் வீதி, நிர்மலகாந் திரையரங்கு, பாலையூத்து புகையிரதக்கடவை பகுதி, முகமதியாநகர், பூம்புகார் வீதி, பனந்தோட்டம்(பாலையூத்து), லிங்கநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக திருகோணமலை நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் 29ஆம் திகதி காலை 08 மணிமுதல் மாலை 05 மணிவரை திருகோணமலை உவர்மலை லோவர் வீதி பகுதி, ப்லாண்டண்ட் பொய்ண்ட் உவர்மலை ஆகிய பிரதேசங்களிலும் 30ஆம் திகதி காலை 09 மணிமுதல் மாலை 05 மணிவரை திருகோணமலை மஹமாய மாவத்தை, 4ம் கட்டை, ஹொட்பே, தீவரகம்மான, சங்கம, தானியகம, சீனக்குடா ஆகிய பிரதேசங்களிலும் இவ்வாறு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக திருகோணமலை நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய மூதூர் மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட பிரதேசம் நிலாவெளி, கிண்ணியா மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட பிரதேசங்களிலும் இவ்வாறு மின்தடை அமுல்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை சர்தாபுர பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சம்பவ தினமான நேற்று முன்தினம் திருகோணமலை சமுத்திராகம பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 01 கிராம் 212 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக சர்தாபுர விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

மேலும் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 60 வயது மதிக்கத்தக்க திருகோணமலை சமுத்ராகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று திருகோணமலை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்க உள்ளதாக திருகோணமலை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# தரம் பிரிக்கப்பட்ட குப்பைகள் மாத்திரமே பொறுப்பேற்கப்படும்

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு




(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் தரம் பிரிக்கப்பட்ட குப்பைகள் மாத்திரமே பொறுப்பேற்கப்படும் என மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தும் வகையில் சுகாதாரப் பிரிவினால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், மதஸ்தலங்களின் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கல்முனை மாநகர சபை எல்லையினுள் சேகரிக்கப்படுகின்ற திண்மக்கழிவுகள் யாவும் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பள்ளக்காடு எனும் பகுதியிலேயே கொட்டப்பட்டுவருகின்ற நிலையில், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்புரைக்கமைவாக தற்போது தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை மாத்திரமே அங்கு கொட்டுவதற்கு அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன் தரம்பிரிக்கப்படாத குப்பைகளைக் கொட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையினால், பொதுமக்கள் தமது வீடுகளில் சேர்கின்ற சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், மரக்கறி, இலை, குலைகள் போன்ற உக்கக்கூடிய கழிவுகளை ஒரு பையிலும் பிளாஸ்ரிக், பொலித்தீன், ரின்கள் மற்றும் உக்க முடியாத பொருட்களை வேறொரு பையிலுமாக ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு தரம் பிரிக்கப்படாத குப்பைகள் எக்காரணம் கொண்டும் மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

கடந்த 20ஆம் திகதிமுதல் அமுலுக்கு வந்துள்ள இப்புதிய நடைமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையை தொடர்ந்தும் வினைத்திறனுடன் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

அத்துடன், மாநகர சபையின் குப்பை சேகரிப்பு வாகனங்கள் அனைத்து வீதிகளுக்கும் கிரமமாக வருகின்றபோதிலும் சிலர் பொறுப்பற்ற முறையில், சமூக உணர்வின்றி, வீதிகள் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை வீசிச் செல்கின்றனர். இவ்வாறான நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு, கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் - என அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு கிலோ கேரள கஞ்சாவுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

(ஏறாவூர் நிருபர் நாஸர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் கேரள கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து சுமார் இரண்டு கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கஞ்சா எடுத்துச்சென்ற மோட்டார் சைக்கிள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எச்.எம்.ஷியாம் தெரிவித்தார்.

வாழைச்சேனை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஏறாவூர் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 24 மணிநேரத்தில் நுவரெலியாவில் புதிதாக 302 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் தகவல்

(மனுர சுதத் செல்ஹேவா)

நுவரொலியா மாவட்டத்தில் நேற்றுக் காலை வரையான 24 மணிநேரத்தில் புதிதாக 302 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தக் காரியாலயம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நுவரெலியா மாவட்ட பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயங்களான அம்பகமுவவில் 17 பேருக்கும், பொகவந்த லாவையில் 08 பேருக்கும், கெதட்டகலை பிரதேசத்தில் 61 பேருக்கும், கொத்மலை பிரதேசத்தில் 77 பேருக்கும், லிந்துலையில் 06 பேருக்கும், மஸ்கெலியாவில் ஒருவருக்கும், மத்துரட்டையில் ஒருவருக்கும் கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் 09 பேருக்கும், நவ திஸ்பனேவில் 44 பேருக்கும், ராகலையில் 14 பேருக்கும், வலப்பனையில் 49 பேருக்கும், நுவரெலியா நகரில் 09 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக அடையாங்காணப்பட்டுள்ள 302 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் அடையாளங்காணப்பட்டுள்ள மொத்த கொவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 26ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு புதிதாக தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள 302 நோயாளர்களையும் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளங்காணப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்தக் காரியாலயம் குறிப்பிட்டுள்ளது.

# அதிக விலைக்கு சாராயம் விற்பனை செய்தவர் கைது



(க.கிஷாந்தன்)

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நுவரெலியா பொரகஸ் பகுதியில் வீடொன்றில் சட்டத்துக்குப் புறம்பாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிபடையினர் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 124 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்படடுள்ளன. நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய நுவரெலியா மதுவரித் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் மதுபானசாலைகளும் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில், சட்டத்துக்குப் புறம்பாகவும் அதிக விலையிலும் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா லெப்பை லாபிர் காலமானார்!




யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கலாபூஷணம் மீரா லெப்பை லாபிர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாரடைப்பால் காலமானார்.

கலாபூஷணம், தேசகீர்த்தி, தேசசக்தி, ஊடகச்சுடர், நிழல்படத் தாரகை ஆகிய விருதுகளைப் பெற்ற எம்.எல்.லாபிர் யாழ். ஊடக அமைய உப தலைவரும், முஸ்லிம் மீடியா போரத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளராகவும், நவமணி, விடிவெள்ளி, வீரகேசரி, தமிழ் மிரர், மெட்ரோ நியூஸ் ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளராகவும் சேவையாற்றினார்.

அதேவேளை, மானிப்பாய் வீதி, பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவராகக் கடமையாற்றிய லாபிர், பிளவ்ஸ் ஹாஜியார் பவுண்டேசன் என்னும் அமைப்பின் மூலம் பல சமூகப்பணிகளை ஆற்றி வந்தார்.

யாழ். ஊடக அமையத்தின் பயணங்களில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்ட லாபிர் 2019ஆம் ஆண்டில் ஊடக விருது மூலம் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாவத்தகமயிலுள்ள பாடசாலையொன்றில் 3 இலட்சம் ரூபா பெறுமதியான கணினிகள் திருட்டு

(இக்பால் அலி)

பாடசாலையிலுள்ள கணினிகூடத்தின் பூட்டை உடைத்து திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக மாவத்தகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதற்கமைய, சிலர் பூட்டை உடைத்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 05 கணினி இயந்திரங்களை திருடிச்சென்றுள்ளனர். இந்நிலையில், சந்தேகநபரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பிலஸ்ஸ மகா வித்தியாலயத்திலுள்ள கணினிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. திருடப்பட்ட ஒவ்வொரு கணினியும் தலா 70 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என பாடசாலை அதிபர் குமுதினி குமாரி பொலிஸில் முறைப்பாடு தெரிவித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

கதவின் பூட்டு வேறு திறப்பு பயன்படுத்தி கதவை மூடிச்சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்துள்ளது. பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைளுக்காக பயன்படுத்தக்கூடிய கணினி இயந்திரங்கள் ஐந்தையும் கொள்ளை யிட்ட சந்தேகநபர்களை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் அணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



வரலாற்றுச் சிறப்புமிக்க சிலாபம் முன்னேஸ்வரம்ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் சமூக இடைவெளியைப் பின்பற்றி இடம்பெற்றது. (படங்கள் : உடப்பு நிருபர்)

# குற்றம் தவிர்

Police Roundup

தொகுப்பு:- நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எம்.டீ.எச். பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முத்தெட்டுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### வத்தளை

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எவரியவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் வத்தளை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### சியம்பலாண்டுவ

சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 05ஆவது கம்மான பிரதேசத்தில் சியம்பலாண்டுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 640 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 210 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் மேலுமொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கோடாவுடன் ஒருவர் கைது

### கட்டுநாயக்க

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீனடின பிரதேசத்தில் நேற்று முன்தினம் கட்டுநாயக்க பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபானத் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 1,378 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹீனடியன பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெயயப்பட்டுள்ளார்.

## வீதி விபத்துகளில் நால்வர் பலி

### கலேவெல

கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - அம்பேபுஸ்ஸ வீதியில் நேற்று முன்தினம் களுு பாலத்துக்கு அருகில் தம்புள்ளையை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி விபத்துக்குள்ளாகியுள்ளா.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி கலேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

அதுரபரயாய, தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### கிளிநொச்சி

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணம் - வவுனியா வீதியில் நேற்று முன்தினம் கிளிநொச்சி இளையோர் சேவை சங்கத்துக்கு அருகில் வவுனியாவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் வேன் என்பன நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பின்னால் பயணித்த நபர் ஆகிய இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சாரதி உயிரிழந்துள்ளார்.

உக்குவெல, மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வேனின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பயாகல

பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - வெல்லவாய வீதியில் நேற்று முன்தினம் கலமுல்ல பிரதேசத்தில் காலியை நோக்கிய பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி மின்கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது..

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சாரதி களுத்துறை, நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மெதமுலன பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### அலவ்வ

அலவ்வ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹரச்சிமுல்ல, வல்லெஹெவ வீதியில் கொஸ்சின்ன சந்தியில் நேற்று முன்தினம் மஹரச்சிமுல்லவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பின்னால் பயணித்த நபர் ஆகிய இருவரும் அலவ்வ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர்.

கொஸ்ஸின்ன, மஹரச்சிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## கொலைச் சம்பவம்

### அம்பகஸ்தோவ

அம்பகஸ்தோவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதஹின்ன பிரதேசத்தில் கடந்த 16ஆம் திகதி பெண்ணொருவர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக அம்பகஸ்தோவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கந்தேஹெல்ல, கொடகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபருக்கும் உயிரிழந்த பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளத.

சடலம் புதைக்கப்பட்ட இடத்துக்கு பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கந்தேஹெல்ல, கொடகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வவுனியாவில் மேலும் 94 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 94 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 94 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதில் மகாறம்பைக்குளம், தவசிகுளம், புதிய சாலம்பைக்குளம், மறவன்குளம் ஆகிய பகுதிகளிலேயே அதிகளவிலான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை பேணியவர்களை சுய தனிமைப்படுத்து வதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஊரடங்கு நேரத்தில் நடமாடுபவர்களை வழிமறித்து இராணுவத்தினர் - பொலிஸார் விசேட சோதனை




(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஊரடங்கு நேரத்தில் நடமாடுபவர்களை வழிமறித்து இராணுவத்தினரும் பொலிஸாரும் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், அவர்களை எச்சரித்தும் அனுப்பினர்.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த ஊரடங்குச் சட்ட நேரத்தில் அத்தியாவசிய தேவையின்றி வீதிகளில் நடமாடுவோரை கட்டுப்படுத்த வவுனியா பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா பழைய பஸ் நிலையம் மற்றும் நகர பகுதிகளை அண்டி விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் வீதிகளால் செல்லும் வாகனங்களை வழிமறித்து சோதனை மேற்கொண்டு வருவதுடன், அத்தியாவசிய தேவையின்றி வீதிகளில் பயணிப்போரை எச்சரித்து, திருப்பி வீடுகளுக்கு அனுப்பினர்.

# வவுனியாவில் கொரோனா தொற்றால் மூவர் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மதவுவைத்தகுளம் கொரோனா சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த சிப்பிகுளம் பகுதியைச் சேர்ந்த நபர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் வவுனியா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

இதேவேளை, வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் 61 வயதான முதியவர் சுகவீனம் காரணமாக அவரது வீட்டில் மரணமடைந்திருந்தார். இந்நிலையில், அவருக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதன் முடிவுகளின்படி அவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர் வவுனியா வைத்தியசாலை சிற்றூழியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர் என தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியா கனகராயன்குளம் வடக்கு கிராமசேவகருக்கு கொரோனா தொற்று

கனகராயன்குளம் வடக்கு கிராம சேவகருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் கிராமசேவகருக்கு காய்ச்சல் இருந்த நிலையில் புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் நேற்று அன்ரிஜன் பரிசோதனையை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் அங்கு பணிபுரியும் சில உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று பீடித்துள்ளமை அண்மையில் உறுதிசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பிச்சென்ற அகதிகள் குடும்பம் ஒன்று டெட்வானில் தஞ்சம் புகுந்த நிலையில் காட்டுப் பகுதியில் அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழித்ததை படத்தில் காணலாம்.




ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனக் கோரி ஜேர்மனியின் பல்வேறு நகரங்களில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.



ஆப்கானிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் விமானம் மூலம் உஸ்பகிஸ்தானை வந்தடைந்தனர்.




துருக்கியில் பரவிய காட்டுத் தீ காரணமாக ஏராளமான உயிரினங்கள் உயிரிழந்துள்ளன. இந்நிலையில், காயமடைந்த உயிரினங்களுக்கு இயற்கை ஆர்வலர்கள் சுயமாக முன்வந்து சிகிச்சை வழங்கிவருகின்றனர்.



ஹெய்ட்டியில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 2 ஆயிரத்து 207 பேர் உயிரிழந்ததுடன், 344 பேர் காணாமல்போயுள்ளனர். இந்நிலையில், அங்கு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளோர் நிவாரணம் பெற்றுக்கொள்வதற்காக முண்டியடிப்பதை படத்தில் காணலாம்.

# அமெரிக்காவில் வெள்ளப்பெருக்கு; 22 பேர் பலி: மேலும் பலர் மாயம்



அமெரிக்காவின் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 22 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன்ா மேலும் பலர் காணாமல் போயிருக்கலாம் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடும் மழை பெய்துள்ளது. இதன் காரணமாக குடியிருப்புப் பகுதிகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் கடுமையான சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் காணாமல்போனோர் தொடர்பான விபரங்களை அந்நாட்டு அனர்த்த மத்திய நிலையம் வெளியிட்டுள்ளபோதிலும் மேலும் பலரை காணவில்லையென உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# "வருத்தமளிக்கிறது"



## ஆப்கான் நிலை குறித்து பைடன் கவலை

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகளை மீளப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அந்நாட்டின் நிலை வருத்தமளிக்கக்கூடியதாக இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனான கூட்டம் பைடன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாம் எப்போதும் மக்களைப் பாதுகாப்பதற்காகவே செயற்பட்டு வந்தோம். அதற்காக பல்வேறு மாற்றங்களை கொண்டுவரவேண்டி ஏற்பட்டது. இன்னொரு நாட்டின் உள்நாட்டுப் போரில் அமெரிக்காவின் ஆதிக்கம் அவசியமற்றதென நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

அதன்பிரகாரமே எமது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. அங்கு மக்களை பாதுகாப்பாக அகற்றுவதற்கான செயற்பாடுகளை அமெரிக்க இராணுவம் முன்னெடுத்து வருகிறது" - என ஜோ பைடன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலியாவில் தவளைகளுக்கு ஆபத்து



அவுஸ்திரேலியாவில் தவளைகள் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள ஆய்வாளர்கள், நான்கு தவளை இனங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்நாட்டில் 29 ஆய்வாளர்கள் இணைந்து நடத்திய ஆராய்ச்சிகளின் முடிவுகளில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அங்கு அண்மையில் பெரும் காட்டுத் தீ ஏற்பட்டு பேரழிவை உண்டாக்கியது. இதனையடுத்து விலங்கின ஆர்வலர்கள் மற்றும் நிபுணர்கள் இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வின் பிரகாரம் அவுஸ்திரேலியாவுக்கே உரித்தான நான்கு தவளை இனங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு காலநிலை மாற்றமே முக்கிய காரணமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தவளைகளைப் பாதுகாக்கத் தவறும்பட்சத்தில் எதிர்வரும் இரு தசாப்த காலத்தில் தவளை இனங்கள் பல முற்றாக அழிந்துவிடும் ஆபத்துள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# பெங்களூரில் சிறுவர் கடத்தல் அதிகரிப்பு; ஒரு மாதத்தில் 101 பேர் அதிரடியாக மீட்பு

பெங்களூரில் சமீப நாட்களாக சிறுவர்கள் கடத்தப்படுவது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. ஒரு மாதத்தில் 101 பேரை ரயில்வே பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

ஒருசிலர் பணத்தாசையால் வெளி மாநிலங்களிலிருந்து சிறுவர்களை கடத்தி வருகின்றனர். இவர்களின் பெற்றோரிடம் கல்வியளிப்பதாக நம்பவைத்து, அவர்களை அழைத்து வந்து, தொழிற்சாலைகள் உட்பட பல இடங்களில் பணியில் அமர்த்துவதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

ரயில்களில் அழைத்து வருவதால், ரயில்வே பாதுகாப்புப் படையினர் கண்காணிக்கின்றனர். ஒரே மாதத்தில், 101 பேரை ரயில்வே பாதுகாப்புப் படையினர் மீட்டனர். இதில் 56 பேர் பீஹாரைச் சேர்ந்தவர்கள். 15 பேர் கர்நாடகர். 12 பேர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். விசாரணையில் அவர்கள் தாங்கள் மத்ரசாவில் கல்வி கற்க வந்ததாக கூறியுள்ளனர். அதுகுறித்து விசாரித்தபோது, இந்த மத்ரசாக்கள் கொரோனாவால் மூடப்பட்டிருப்பது தெரிந்தது.

அதன்பின் சிலரிடம் தீவிரமாக விசாரித்தபோது தங்களுக்கு நல்ல வேலை வாங்கித்தருவதாக கூறி அழைத்து வந்ததை ஒப்புக்கொண்டனர். தற்போது இவர்கள் குழந்தைகள் நல பாதுகாப்பு மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வைத்திருந்த ஆதார் கார்டுகளில் பொய்யான தகவல் உள்ளது. இந்த ஆதார் கார்டில் அவர்களின் வயது 18இற்கும் மேற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.. ஆனால், பொலிஸ் விசாரணையில் குறித்த சிறுவர்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

# எல்லையில்லா கனவுகள்

இந்த வருடம் பல்வேறு விருதுகள் கிடைக்குமென பொலிவூட்டின் நட்சத்திர நடிகையாக வலம்வரும் அன்யா டெய்லர் தெரிவித்துள்ளார். சமீபகாலமாக அவருடைய வித்தியாசமான புகைப்படங்கள் குறித்து சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்படுகிறது. "நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இவ்வருடம் எனது திறமைக்கு மேலும் அங்கீகாரம் கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்" என டெய்லர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மிக இளம் வயதில் இளையோரைக் கவரும் விதத்தில் மொடலிங் செய்துவரும் அன்யா டெய்லர் உணர்ச்சிகளை மிக இலாவகமாக வெளிப்படுத்தும் வகையில் நடிப்புத்திறன் கொண்டவர் என பாராட்டுப் பெற்றுள்ளார்.



2021ஆம் ஆண்டுக்கான 'ஸ்கிரீன் எக்டர்ஸ் கில்ட்' என்ற புகழ்வாய்ந்த விருது அன்யா டெய்லருக்கு கிடைத்துள்ளது. இதன் காரணமாக அவரது புகழ் மேலும் உச்சமடைந்துள்ளது.

எல்லையில்லா கனவுகள் எனக்குண்டு என அவர் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளமை குறித்து அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறிப்பாக அவரது காதல் தொடர்பிலும் ஊடகங்கள் பேச ஆரம்பித்துள்ளன.

# கொரோனா 3ஆம் அலை ஒக்டோபரில் உச்சம் தொடும்; பிரதமர் மோடியின் அலுவலக நிபுணர்கள் அறிக்கை

இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொரோனா பாதிப்பு உச்சம் தொடும் என பிரதமர் நரேந்திர மோடியின் அலுவலக நிபுணர்கள் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளனர்.

கொரோனா பரவல் தொடர்பாக உள்துறையின் வழிகாட்டுதல்படி தேசிய பேரிடர் நிர்வாக மையத்தின் கீழ், வி.கே.போல் தலைமையில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபரில் மூன்றாம் அலை உச்சம் தொடும் எனவும் அதனை சமாளிக்க மருத்துவ வசதிகள் போதுமானதாக இல்லை என்றும் பிரதமர் அலுவலகத்தில் நிபுணர்கள் எச்சரிக்கை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் கடந்த ஆண்டு கோடிக்கணக்கானோரை பாதித்து பின்னர் கட்டுக்குள் வந்ததுடன், இந்த ஆண்டு ஏப்ரல் முதல் இரண்டாம் அலை பரவலாக உருவெடுத்து கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியது. முதல் அலையை விட இரண்டாம் அலை மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்திய நிலையில் தற்போது நோய்ப்பரவல் கட்டுக்குள் வந்திருக்கிறது. ஆனாலும் மூன்றாம் அலை பரவல் குறித்த கணிப்புகள் வெளியாகி பொதுமக்களை பீதிக்கு ஆளாக்கியுள்ளது.

இந்நிலையில், மூன்றாம் அலை பரவல் குறித்து நிபுணர்கள் குழு மத்திய அரசிடம் சமர்ப்பித்திருக்கும் அறிக்கை ஒன்று குறித்த தகவல்கள் தற்போது வெளியாகி இருக்கிறது.

மூன்றாம் அலை பரவல் குழந்தைகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் என அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் குழந்தை மருத்துவத்துவத் திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அதிகம் தேவைப்படும் அளவிற்கு நிலைமை மோசமடையலாம் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## SLC Invitational T20 League


# இறுதிப்போட்டியில் க்ரேஸ் – ரெட்ஸ் அணிகள் இன்று பலப்பரீட்சை




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வருகின்ற ‘இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக்’ தொடரில் இன்று நடைபெறுகின்ற மாபெரும் இறுதிப் போட்டியில் தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணியும் - தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணி விளையாடிய 6 போட்டிகளில் 4 போட்டிகளில் வெற்றிபெற்று எந்தவொரு போட்டியிலும் தோல்வியைத் தழுவாமல் 10 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்கு முதல் அணியாக தெரிவாகியிருந்த நிலையில், இறுதிப் போட்டிக்கு அடுத்த அணியை தெரிவுசெய்வதற்கான 12ஆவது லீக் போட்டி நேற்று முன்தினம் இரவு கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

மழையின் குறுக்கீடு காரணமாக அணிக்கு 15 ஓவர்கள் கொண்ட போட்டியாக குறித்த போட்டி ஆரம்பமானது. குறித்த போட்டியில் அஷான் பிரியஞ்ஜன் தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் - தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது.




அதன்பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அணியின் துடுப்பாட்டத்தில் சமந்த பெர்னாண்டோ 36 பந்துகளில் 37 ஓட்டங்களையும், பெத்தும் நிசங்க 22 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர்.

115 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணி 14.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் இலகு வெற்றியடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் தினேஷ் சந்திமால் 40 ஓட்டங்களையும், அவிஷ்க பெர்னாண்டோ 38 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர்.

இந்தப் போட்டியில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எஸ்.எஸ்.சி. ரெட்ஸ் அணி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து 7 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. அந்த அடிப்படையில் இன்றைய தினம் நடைபெறுகின்ற சம்பியனை தீர்மானிப்பதற்கான மாபெரும் இறுதிப் போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணியும், தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணியும் இரவு 7 மணிக்கு பலப்பரீட்சை நடத்துகின்றன.







# டோக்கியோ பராலிம்பிக் இன்று ஆரம்பம்

*(ரமணி)*

டோக்கியோ 2020 பராலிம்பிக் இன்று இரவு கோலாகலமாக ஆரம்பமாகிறது. ஆரம்ப விழா இன்று இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கு ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் ஆரம்பமாகும். நிறைவு நாள் வைபவம் செப்டெம்பர் 5ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைபெறும். இலங்கை மக்கள் நள்ளிரவு 12.30 மணிக்கு பார்க்கலாம்.

ஜப்பானில் 21 மைதானங்களில் 22 விளையாட்டுகளில் 539 போட்டிகள் இடம்பெறும். பெட்மிண்டன், டேக்வாண்டோ ஆகிய போட்டிகள் டோக்கியோவில் அறிமுகமாகும் என்று பராலிம்பிக் இணையதளம் தெரிவித்துள்ளது.

163 நாடுகளைச் சேர்ந்த 4,537 வீர, வீராங்கனைகள் போட்டியிடுகின்றனர். கொரோனா தொற்று காரணமாக பார்வையாளர்கள் இல்லாத அரங்கில் ஆரம்ப வைபவமும், நிறைவுநாள் நிகழ்ச்சியும் நடைபெறும். பராலிம்பிக் போட்டியாளர்கள், அவர்களின் பயிற்சியாளர்கள், மருத்துவர்கள், உதவியாளர்கள் அனைவரும் ஒலிம்பிக் கிராமத்தில் தங்குவார்கள். அவர்களுக்கான கொரோனா பரிசோதனைகள் அங்கு நடைபெறும்.

பராலிம்பிக்ஸ் வலைத் தளத்தின்படி, ‘பராலிம்பிக்’ என்ற வார்த்தை ‘பரா’ என்ற கிரேக்க முன்மொழியின் கலவையாகும், இதன்




பொருள் ‘அருகில்’ அல்லது ‘ஒலிம்பிக்’. அதன் பொருள் என்னவென்றால், ஒலிம்பிக்கிற்கு இணையான விளையாட்டுகள் பராலிம்பிக்ஸ் மற்றும் இரண்டு இயக்கங்கள் எவ்வாறு அருகருகே உள்ளன என்பதை விளக்குகிறது என்று வலைத்தளம் கூறுகிறது.


பராலிம்பிக் போட்டிகள் நாஜி ஜேர்மனியிலிருந்து தப்பி இங்கிலாந்து சென்ற யுத மருத்துவர் சர் லுட்விக் குட்மனால் நிறுவப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில், 1944 இல் குட்மேன் இங்கிலாந்தில் ஸ்டோக் மாண்டெவில் மருத்துவமனையில் முதுகெலும்பு காயங்கள் மையத்தைத் திறந்தார். “காலப்போக்கில், மறுவாழ்வு விளையாட்டு பொழுதுபோக்கு விளையாட் டாகவும் பின்னர் போட்டி விளையாட்டாகவும் உருவானது’’ என்று பராலிம்பிக்ஸ் இணையதளம் விளக்குகிறது.



குட்மேன் சக்கர நாற்காலி விளையாட்டு வீரர்களுக்கான முதல் போட்டியை ஏற்பாடு செய்தார். (‘ஸ்டோக் மாண்டேவில் கேம்ஸ்’ என்று பெயரிடப்பட்டது.) ஜூலை 29, 1948இல், இது லண்டன் 1948 ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவின் நாள். ஸ்டோக் மான்டெவில் விளையாட்டுகளில் 16 காயமடைந்த இராணுவ வீரர்களும், பெண்களும் வில்வித்தை போட்டியில் பங்கேற்றனர்.

ஸ்டோக் மாண்டேவில் விளையாட்டு, பின்னர் பராலிம்பிக் விளையாட்டாக மாறியது. 1960இல் முதல் பராலிம்பிக் போட்டிகள் இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்றது. தொடக்க ஆட்டங்களில் 23 நாடுகளைச் சேர்ந்த 400 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். அப்போதிலிருந்து ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் பராலிம்பிக்ஸ் நடத்தப்படுகிறது. 1976இல் முதல் குளிர்கால பராலிம்பிக் விளையாட்டுகள் ஸ்வீடனில் நடத்தப்பட்டன, அதன்பின்னர் ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் நடைபெற்றது.

கை, கால் இல்லாதவர்கள், அங்கக் குறைபாடுள்ளவர்கள், பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர் சமூகத்தால் புறக்கணிக்கப்படாது கவனிக்கப்பட்ட வேண்டியவர்களாக உள்ளனர். பராலிம்பிக் அவர்களின் திறமைகளை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.




# சாதிப்பதற்கு ஊனம் தடை அல்ல



*(ரமணி)*

பராலிம்பிக் அறிமுகமானபோது சேர்க்கப்பட்ட முதல் விளையாட்டுகளில் சக்கர நாற்காலி வாள் சண்டையும் ஒன்று. (சக்கர நாற்காலி ஃபென்சிங்) இங்கிலாந்தில் கடந்த 1953ஆம் ஆண்டில் ஸ்டோக் மாண்டேவில் விளையாட்டுகளில் அறிமுகமானது. இதை போர் வீரர்களுக்கான போட்டியாக இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகியன விளையாடின.

ரோமில் 1960 பராலிம்பிக் விளையாட்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, திட்டமிடப்பட்ட திட்டத்தில் நிகழ்வுகள் மட்டுமே அடங்கும். சர்வதேச ஃபென்சிங் கூட்டமைப்பின் (எப்.ஐ.ஈ, பிரெஞ்சு மொழியில்) விதிமுறைகளின் அடிப்படையில், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு டோக்கியோ விளையாட்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

குறைபாடுகள் உள்ளவர்கள் மட்டுமே இதில் போட்டி யிடலாம். கால் இல்லாதவர்கள், பிறவி குறைபாடுகள், பக்கவாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களும் சக்கர நாற்காலி வாள் சண்டையில் பங்குபற்றலாம். சக்கர நாற்காலியில் ஒவ்வொரு விளையாட்டு வீரரின் சமநிலை மற்றும் ஆயுதத்தைப் பயன்படுத்தும் கையின் நிலைக்கு ஏற்ப வகைகள் பிரிக்கப்படுகின்றன.

விளையாட்டு வீரர்களின் நாற்காலிகள் தரையில் நங்கூரமிடப்படுகின்றன. இது விளையாட்டு இடத்தை கட்டுப்படுத்துகிறது. மற்றும் நாற்காலியை நகர்த்தாமல் விளையாட்டு வீரர்களை கட்டுப்படுத்துகிறது. ஒருவர் தனது நாற்காலியை நகர்த்தினால், போட்டி நிறுத்தப்படும். விளையாட்டுக்கு தேவையான உபகரணங்களில் முகமூடி, ஜெக்கெட், பாதுகாப்பு கையுறைகள் உள்ளன.

நாற்காலியின் சக்கரங்களுக்கு ஒரு பாதுகாப்பு கவசம் உள்ளது. போட்டியாளரின் கால்கள் மற்றும் நாற்காலியின் சக்கரங்களைப் பாதுகாக்க ஒரு உலோகக் கவசம் பயன்படுத்தப்படுகிறது.

போட்டி பகுதி, 4 மீற்றர் நீளம், 1.5 மீற்றர் அகலம். சிறப்பு சென்சார்களைப் பயன்படுத்தி, வாள்கள் ஒரு மின்னணு எனும் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. இது ஒரு தொடுதல் செல்லுபடியாகுமா என்பதைக் குறிக்கிறது. இதனடிப்படையில், ஒரு புள்ளி சம்பாதிக்கிறதா இல்லையா என்பதை நடுவர் முடிவு செய்கிறார். இரட்டை தொடுதலையும் துல்லியமாகக் கணிக்க முடியும்.

# சின்சினாட்டி பகிரங்க டென்னிஸ் சம்பியன்களான சுவரேவ், பார்டி

சின்சினாட்டி பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு சம்பியனாக ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் சுவரேவும், மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியனாக அவுஸ்திரேலிய வீராங்கனை ஆஷ்லே பார்டியும் தெரிவானர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஜேர்மனியின் அலெக்சாண்டர் சுவரேவும், ரஷ்யாவின் ஆந்த்ரே ரூப்லேவும் மோதினர். போட்டியின் ஆரம்பம் முதலே சுவரேவ் அதிரடியாக ஆடினார். இதனால் முதல் செட்டை 6-2 என கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் சுவரேவ் சிறப்பாக ஆடி 6-3 என்ற கணக்கில் வென்றார். இறுதியில் அலெக்சாண்டர் சுவரேவ் 6-2, 6-3 என்ற செட் கணக்கில் எளிதில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆஷ்லே பார்டியும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஜில்டீச்மேனும் மோதினர். ஆரம்பம் முதலே ஆஷ்லே பார்டி சிறப்பாக விளையாடினார். இதனால் முதல் செட்டை 6-3 என கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் ஆஷ்லே பார்டி அதிரடியாக விளையாடி 6-1 என்ற கணக்கில் வென்றார். இறுதியில், ஆஷ்லே பார்டி 6-3, 6-1 என்ற செட் கணக்கில் எளிதில் வெற்றிபெற்று சம்பியனாக தெரிவானார்.



## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 2023 வரை நீடிக்கப்பட்ட பென்ஸிமாவின் ஒப்பந்தம்




உதைபந்து உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவராக கருதப்படும் ஸ்பெயினைச் சேர்ந்த கரிம் பென்ஸிமாவின் ஒப்பந்த காலம் அடுத்த பருவகாலத்தோடு நிறைவுக்குவரும் நிலையில், அவரது கழகமான ரியல் மெட்ரிட் கழகமானது அவரது ஒப்பந்தத்தை மேலும் இரு வருடங்களுக்கு அதாவது 2023ஆம் ஆண்டுவரை நீடித்துள்ளது.

33 வயதான கரிம் பென்ஸிமா 560 போட்டிகளில் விளையாடி 281 கோல்களை பெற்றுள்ளார். இது மாத்திரமல்லாமல் ரியல் மெட்ரிட் கழகம் நான்கு சம்பியன் லீக், மூன்று லா-லிகா மகுடங்களையும் கைப்பற்றுவதற்கு கரிம் பென்ஸிமா காரணமாக இருந்துள்ளார்.

ரியல் மெட்ரிட் கழகத்தினுடைய தலைவர் சேர்ஜியோ ரொமொஸ் அண்மையில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல கழகங்களில் ஒன்றான பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) கழகத்தில் இணைந்த நிலையில், கரிம் பென்ஸிமாவை தக்கவைக்கும் முயற்சிகளை ரியல் மெட்ரிட் கழகம் மேற்கொண்டுள்ளது.